மாற்றக்கூடாது என்று பலமுறை மத்திய அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது. மாநில முதல் அமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சர் அவர்களுக்கு எழுதியிருக்கிறார்கள். இருந்தாலும், நிலையம் மாற்றப்படவில்லை. அதிகாரிகள்தான் மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்றுதான் திருப்பித் திருப்பி கூறுகிறார்களே தவிர நிலையங்கள் இங்கேயே இருப்பதாகத்தான் சொல்லப்படுகிறது. சிற்சில சிப்பந்திகள்தான் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பதவி உயர்வு தரப்படவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் அவர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலையில் இப்பொழுது அங்கே அந்த நிலையம் செயல்புட்டுக்கொண்டு தான் வருகிறது.

ஆரம்பாக்கத்தில் மீன் குளிர்பதன அறை அமைப்பு

* 128 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கும்மிடிப்பூண்டித் துணை வட்டம், ஆரம்பாக்கத்தில் துவங்க இருக்கும் மீன் குளிர்பதன அறை அமைப்புத் திட்டம் காலதாமதமாவதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : செங்கற்பட்டு மாவட்டம், ஆரம்பாக்கத்தில் ஒரு மெட்ரிக் டன் கொள்திறனுள்ள குளிர்பதன அறையுடன் கூடிய இரண்டு மெட்ரிக் டன் உற்பத்தித் திறனுள்ள குளிர்பதனப் பொறியை அமைப்பதற்காக, 1971-ம் ஆண்டில் அரசு ஒப்பளிப்பு வழங்கியது. கட்டடங்கள் கட்டுவதற்கான வரைபடங்களையும் மதிப்பீடுகளையும் தயாரித்து அனுப்புமாறு, சைதாப்பேட்டைக் கோட்டப் பொதுப்பணித் துறை நிர்வாகப் பொறியாளரை, மீனளத்துறை இயக்குநர் கேட்டுள்ளார். அவரிடமிருந்து வரைப்படங்களும் மதிப்பீடுகளும் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆரம்பாக்கம் கிராமத்தில் 350/1 சர்வே எண்ணில் உள்ள நிலத்தில் குளிர்ப்பதனப் பொறி—குளிர்ப்பதன அறையை அமைப்பதற்கு செங்கற்பட்டு மாவட்டம், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி மீனளத்துறைக்கு ஏற்கெனவே அனுமதி வழங்கியுள்ளார். இயந்திரங்கள் வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் மீனளத்துறை இயக்குநரால் முடிவாகப் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. அந்த விலைப் புள்ளிகளுக்கு மீனளத்துறையின் இயந்திர ஆலோசனைக் குழு

1972 ஆகஸ்ட் 17]

ஏற்பளித்த பிறகு, அவை அரசுக்கு வந்து சேரும். நடைமுறைகள் யாவும் கடைப்பிடிக்கப்பட்ட பிறகு, ஆரம்பாக்கத்தில் குளிர்ப்பதனப் பொறி—குளிர்ப்பதன அறை நிறுவப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த ஆரம்பாக்கம் ஆந்திராவின் எல்லைப் பகுதியில் இருக்கிறது. அங்கிருந்து சென்னைக்கு சுமார் 40 மைல் தூரம் இருக்கிறது. எனவே, ஆரம்பாக்கத்தில் இருந்து பிடிக்கப்பட்ட மீனை சென்னைக்கு கொண்டுவருவதற்குமுன் கெட்டுவிடுவதாக மீனவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதனால் 1971-ம் ஆண்டிலேயே அங்கு குளிர்பதன வசதி செய்து கொடுக்கப்படுவதாகச் சொல்லப்பட்டு, இன்னும் அப் பணி நிறைவு பெறாமல், மீண்டும் மீண்டும் வற்புறுத்த வேண்டிய நிலையில்தான் இருக்கிறது. ஆகவே, அது எப்போது முடிவுபெறும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நான் முதலிலேயே பதில் சொல்லியிருக்கிறேன். அரசு துரித நடவடிக்கை எடுக்க அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டுள்ளது. அதிகாரிகளும் துரிதமாக நடவடிக்கை எடுத்துவருகிறார்கள். அதனால் விரைவில் முடிவடையும்.

தொலைபேசி கருவிகள் உற்பத்தி

* 129 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் டெலிபோன் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை அமைத்திட மத்திய அரசு முன் வந்திருப்பது உண்மையா ?

(இ). ஆம் எனில், அந்தத் தொழிற்சாலையை தமிழகத்தில் அமைத்திடக் கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) அண்டு (இ) : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இத்தகைய தொழிற்சாலைகளை தமிழகத்தில், குறிப்பாக பின்தங்கிய நிலையிலுள்ள தஞ்சை மாவட்டத்தில் மாயூரத்தில் ஏற்படுத்த அரசு முன்வருமா ?